உ

கடவுள்துணை.

# அகஸ்தியமுனிவாருளிச்செய்த
# சரக்குசுத்தியென்றுவழங்கும்
# கன்மசூத்திரம் - ௱௫௰.
# சூதமுனிநாடி - ௯௰.
# ராஜாங்கநாடி - ௨௫.

இஃது

மதுரை புதுமண்டபம், புக்ஷாப்,

மூ. கருப்பண பிள்ளை,

அவர்களால்

பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

1902.

சென்னைகுளைதொட்டிக்கலைகுமரப்பமுதலிவீதி
2-10 - வது, நெம்பர்வீடு.

சிவமயம்.

அகஸ்தியரருளிச்செய்த

சாக்குகதி என்னும்

# கன்மசூத்திரம் - ௩௰.

—(*)—

காப்பு.

சீரணிகொன்றைசூடுஞ் சிவனிருபாதம்போற்றி
வாரணமுகத்தோன்பாதம் வணங்கிநற் றமிழ்யான்
சொல்லப், பூரணஞானவாலைசரஸ்வதிபாதம்போற்றி
காரணமாணசெஞ்சொற் கன்மசூத்திரந்தான்காப்பே.

கன்மநிவர்த்திசெய்ய.

ஆத்மபூசைவிவரமறிந்தாற்செய் கன்மாகன்மம்
சோதியாமகுமாரத்தில் அருக்கியாடினைக்கக்கேளீர்,
வாதியாபூஜைக்கண்டு அவிழ்த்தியசெய்யவென்றால்
நீதியாய்மகிதர்செய்யுங் கன்மநிவர்த்திசெய்வே

சண்டாளர்செய்கை.

கன்மத்தைக்கலிவர்த்திசெய்பவன்தன்மானவாதியா
வில், வுன்மத்தில்லதமைப்பேருவிக்கியருசெய்ய

மாட்டார், தன்மத்தில்மனஞ்செல்லாது சண்டாளபீ
சத்தோர்கள்; குன்மத்திலழுந்திமாதர் கூடழிந்தேகு
வாரே. ௫

## நூல்பெருமை.

வாறுகேள்முன்னூலாய்ந்து வடமொழி தமிழா
ய்ச்செய்தேன், நூறுபத்தன்பதுக்குள் நிகருள்ள நூ
லொன்றில்லை, வீறுள்ளவினைகளோட்ட வெகுசுறுக்
குடனேதானுங், கூறுகேள்பொதிகைவாழுங் குறுமு
னிகூறலுற்றேன். ௬

## தன்மம்செய்யாதவர்.

தன்மந்தான்மிகுந்தால்செய்யுங் காரியமேதோ
வென்னில், குன்மந்தான்முதலாயுள்ள வியாதிகள்கூ
டிக்கொல்லும், வன்மந்தானுறுப்பில்தோஷம் வந்தி
டும்வறுமைசூழும், தன்மந்தானில்லாமூடர் சமைந்
தும்பின்னரகந்தானே. ௭

## நரகம்விலக்கு.

நரகந்தானகலுஞ்சூட்சம் நாதாக்களுரைக்கமாட்
டார், நரகந்தானகலுஞ்சூட்சம் நவிலுவேனாகமத்தில்
நரகந்தானகலுஞ்சூட்சம நவிலுவேனன்றாய்க்கேளு,
நரகந்தானகலுஞ்சூட்சம்நாட்டினில்புகலொண்ணாதே

ஒண்ணானநாதாக்களுறுதியாய்சொன்னசூட்சம்
ஒண்ணானநாதாக்கள்உரைசெய்யாதொழிந்தசூட்சம்

ஒண்ணானசிவனாரன் றமையவட்குரைத்த சூட்சம்,
ஒண்ணான சூட்சங்கண்டா லொழிந்திடும் வினைகள்
தானே. ௭

நூல்களை யாராய்க்[illegible]

வினையொழி சூட்சந்தன்னை விபரமாய்க்காணவே
ணும், வினையொழிசூட்சந்தன்னைக் கருவினால்காண
வேணும், வினையொழிசூட்சந்தன்னை மெய்பினால்கா
ணவேணும், வினையொழி சூட்சங்காண நூல்களைவி
ரைந்துபாரே. ௮

பாருநீபூரணத்தி னூல்கள்பற்பலவுந்தானே, கா
ருநீகொங்கணர்சொன்ன கடைக்காண்டமதனைப்பாரு
சீருடன்பிறவிதீரச் செப்பினேன்சூட்சந்தன்னை, ஆரு
மேயறியச்சொன்னே மறிந்தவர்ஞானிபாமே. ௯

பிரணவக் கவசம்.

ஞானமாஞ்சூட்சந்தன்னை நவிலுவேன்நாதவிந்து
மோனமாம் பிரணவத்தை முழுதுமே வளையக்கட்டி,
வானமாமவுனந்தன்னை வளைத்துநீசத்தியோடே, வன
மாம்நடுவேயேறிக் கலையினில்சூலமிட்டே. ௰

இட்டிடுஞ்சூலத்தாக்கு இருபுறமெழுத்தைக்கே
ளு, விட்டதோரெழுத்திலேயேவிடாதெழுத்திரண்
டுஞ்சேர்த்து, பட்டதோர்சூலத்தின்மேல்பகர்ந்திடச்
சத்திபிட்டு, அட்டமாமேசூட்சமாமென்று அறிந்து
கொள்ளே. ௰௧

கன்மகுத்திரம்.

அறிந்திந்தச்சூட்சந்தன்னை அரித்தகடனிற்கிறி, செறிந்திடுமெண்கோணமிட்டுத் திக்குப்பாலகனைவைத்து, பிறிந்திடுவாசல்நாலுவளையமிரண்டென்றுபேசி பரிந்திடுவெனைன்கந்தக்ஷத்திரகாளிப்பேரே. ௰உ

பாருநீவீரபாகுதேவரும்பரிவதானுல், சேருநால்வாசல்விட்டுச் செப்புறேன்தறையில்கேளு, காருநீசதுரமாகக் கருதியெண்விரல்தாழ்வாக, ஒருமேகுளிகைசூழ்வொருநான்கும்பமாமே. ௰ங

கும்பம் ஸ்தாபிக்க.

கும்பத்தினிறையத்தண்ணீர்சேரவேசுகந்தமிட்டு, அம்புற்றஆடைசுற்றி அதின்மேலேமஞ்சளப்பி, யின்பமாவிலையுஞ்சாற்றி எலுமிச்சம்பழமுந் தேங்காய், நம்புவாய்மஞ்சள்பூசி வாயிலினடுவேவைவையே. ௰சு

வைத்துநீஅஷ்டகும்பம் வகையெல்லாம் வகையாய்தானே, வைத்துநீபெட்டுதிக்கும் வகையதாய்பின்புசேரு, பத்துநீசெந்நெல்தன்னைப் பரப்பியேகூட்சமிட்டு, முத்திநீகொடுக்கவென்று முறையுடன்பதிக்கமுக்கியம். ௰ரு

உருசெபிக்க,

முக்கியமாகவென்றால் முறைபதுசொல்லக்கேளு, சக்கியஆதிவாரங் காலஸ்நானஞ்செய்து, சிக்கியவேரம்எக்கியஞ் சிறக்கவேவலட்சந்தீரு, முக்கியமாகச்சூட்ச முறுவது சாத்திடாயே. ௰சா

தாக்கியசக்கரத்தில் சுமபந்தான் சுத்திவைத்து, நோக்கியவெழுத்தினூடே நய்யவோ ரெழுத்தாஞ் சூட்சம், ஆக்கியஎழுத்தினாலே அகன்றிடும்வினைகளெல்லாம், பாக்கியமாகச்சொன்னேம்பகர்ந்திடிற்பாவம் போமே. யஎ

கன்மந்திர அட்சரமெழுதிகட்ட.

போச்சுதுநோயாளிக்குப்பிடித்திட்டவினைகளெல்லாம், ஆச்சுதுஅறிந்தானாலப்பனேமனதில்வைத்து, எச்சுதுநோய்களென்று எங்கிநீதிரியவேண்டாம், காச்சுதுநோயாளிக்குக் கட்டிடக்கன்மம்போமே.

கன்மமே போகவென்றால் கடும்பிணியாளர்தம்மை, நின்மமாஞ்சரீரசுத்திசெய்துமேநிஷ்டையாக, தன்மமேமுன்னேவைத்து தான்சொன்ன முறையைச்செய்து, நின்மலரூசாத்திசூட்சத்தில்நிவிர்தியாமே.

நிவிர்தியாஞ்சூட்சத்துக்கு நிறைந்திடத்தூபதீபம், சவிர்த்தியசாந்துபுட்பம்புழுகுடன்சுகந்தஞ்சாற்றி, அவிர்த்திபமாகும்வண்ண மாவொடு தாம்பைப்போற்றி, உவர்த்திய பாவந்திரொன் றுண்மையா யிருந்திடாயே. உ௰

இருந்திடும்வினைகளெல்லா மேகிடுமருந்துசித்தி, அரிந்திடும் பிணிகளெல்லா மகன்றிடுமன்றைக்கேதான், தெரிந்திடுமானாலட்சஞ் சொல்லிய வுண்மையுண்மை, கரிந்திடுங்கசடருக்குகாரணங்காட்டொண்ணாதே

## ...ருசுத்தி.
## சாக்கு...

ஒண்ணானசாக்குசுத்தி யொருவரு முறைக்கவில்லைகண்ணானசாக்குக்கெல்லாங்கன்மமுந்தீராவிட்டால் பண்ணானமருந்திற்சேர்த்துப் பருகிடப்பிணியாளர்க்கு, நண்ணானசெந்தூரங்க ளுட்படும்நண்ணாதே.

## லிங்கம்.

நண்ணாகச்சாக்குசுத்தி நவிலுவோம் லிங்கத்துக்குப், பண்ணானப்பழச்சாறோடே பருகியபாலுங்கூட்டி சண்ணாகமேனிச்சாறு மூன்றையுஞ்சமனாய்ச்சேர்த்து சுண்ணாகலிங்கத்துக்குச் சுறுக்கிடச்சுத்தியாமே.

## வீரம்.

ஆச்சுதுவீரத்துக்கு அடைவுடன் சொல்லக்கேளு, பாச்சுதுஇளநீர்விட்டுப் பண்பாக அவித்துப்போட்டு, ஊச்சுதுகடிகைமூன்று உறபலங்கண்டுகொள்ளு காச்சுதுஇளநீருள்ளே கழஞ்சிகற்பூரஞ்சேரே. உச

## பூரம.

சேர்த்திடுபூரத்துக்குவெற்றிலைமிளகுகூட்டி, காய்ந்திடக்கியாழஞ்செய்து கியாழத்தில்மூணுநாள்வை, வாய்ந்திடுகிழியாய்கட்டி வைத்திடச்சுத்தியாச்சு, ஆர்ந்திடுவெள்ளைசுத்தி அப்பனேஅறையக்கேளே.

## வெள்ளைப்பாஷாணம்.

அறையுமேறனமுரிக்குள்ளே மிளகனைதயனாத்துப்போட்டு, வறையுமேறன்படிதானொன்றும் வற்றவேக

ன்றுய்கா[...]
யேயலர்த்திக[...] ...திமு
றையதுபகரக்கேளே, [...] உசு

### கெவுரி-குதிரைப்பல்லி.

கேளதுபண்ணிப்பாவில் கிழியதுவாரக்கட்டி, ஆளதுகடிகையொன்று அவித்திடுநல்லசுத்தி, சாளதுகுதிரைபல்லி சுத்தியின்குணத்தைக்கேளு, நாளதுகடிகைமூன்று நாவினிலுமிநீராலே. உஎ

### மனோசிலை.

உமிநீரிலூறப்போட்டு வுலர்த்திடச்சுத்தியாச்சு, ஆமினிசிலையின்சுத்தி அப்பனேஅறிந்துகொள்ளு. தாமினிக்காடிநாழி. தண்ணிலேகிழியைப்போட்டு, ஆமினிகடிகைமூன்று அவித்திடச்சுத்தியாமே. உஅ

ஆமிதுபவளசுத்திஆவின்மோரிருநாழிக்குள், தாமினிகிழியாய்க்கட்டித் தாக்கிடுகடிகைமூன்று, ஓமிது உலர்த்திப்போடுஉத்தமம்நல்லசுத்தி, தாமிதுஅரிதாரத்தின் சுத்தியைக்கருதக்கேளே. உகூ

### அரிதாரம்.

கருகியஅமுரிநாழி கல்சுண்ணங்காலதாகும், பருகியமேனிச்சாறுபடிய துகால்தானாகும், சுருதிசேர்கடிகையொன்று கிருதனைச்சுருக்காய்க்காச்சிச், சுருதிபேகலத்தில்சுத்தி செய்திட்டுவுலர்த்திடாயே. ௩௰

...லதான்போகக்
கேளு, ... ன்னில் காச்சியேயுல
ர்த்திப்பின்பு, நலத்தியஎருக்கம்பாலிலூறவைநாளும்
ரெண்டு, கலர்த்தியேகழுவிப்போடு கல்நாரினிசுத்தி
வண்மை. ௩க

கெருடபச்சை,

வண்மையாங்கழுதைநீரில் வாட்டிடுகடிகைமூன்
று,கண்மையாம்பின்பெடுத்துக்கழுவியோவியில்போ
ட்டுப், பண்மையாங்கெருடபச்சைப்பாங்கினைப்பகாக்
கேளு, தண்மையாப்பயறுபோலே தட்டியேகிழியை
க்கட்டே. ௩உ

சீனக்காரம்,

கட்டியேகுமரிசாற்றில் கடிகைமுப்பதுவேகாய்
ச்சி, ஊட்டியேகழுவிப்பின்பு உலர்த்தியேவைத்துக்
கொள்ளு, சட்டியாஞ்சீனக்கார சுத்தியின் சிறப்பைக்
கேளு,ஆட்டியேஆவின்பாலி லூறவைஅதிகசுத்தி.

பொரிக்காரம்.

சுத்தியாம்பொரிக்காரத்துச் சுத்திதான் சொல்ல
க்கேளு, புத்தியாய்கிழியாய்கட்டி எருமைசாணிச்சா
ற்றில், வைதநூமேகொதிகரும்போதுவண்மைசேர்கி
ழியாகவிப், பத்தியாய்சழுவிவைக்கக் குக்கிலபகாக்
கேளா. ௩௪

### குக்கில்-குந்தரிக்கம்-காரம்.

பகருவேன்எருமைமோரில பண்பதாயூறப்போடு, தகருவேன்குந்திரிக்கஞ்சுத்தி சாறறுவேன்சாராயத்தில், உருகவேன்ஊறப்போடு ஒருநாளில்சுத்தியாச்சு, முகருவேன்காரத்துக்கு மூத்திரம்மூன்றுநாளே.

### கெந்தி.

மூன்றுநாள்தான் அவிக்கமுக்கியம்நல்லசுத்தி, தாண்டவமாடுங்கெந்தி சுத்தியின்சார்புகேளு, என்றஆவெண்ணெய்விட்டு இரும்பிலிலுருக்கிப்பாலில், ஆன்றயிரஞ்சுதிரஞ்சாய்க்க அதிதமாய்சுத்தியாச்சே.

### ரசம்.

ஆச்சுதுரசத்தின்சுத்தி அறையுமீற ணடைவாய்த்தானே, போச்சுதுபுகைபூரந்தான்மஞ்சளுஞ்செங்கல்தூளும், பாச்சுதுபொடிபிருப்பு போட்டுநீயரைத்துப்போடு, வாச்சுதுமேனிச்சாறுந் தேனும்பிரண்டையுமாய்மத்தி. ௩௭

மத்தித்துப்பின்புகேளு மருவிய இஞ்சிச்சாறு, கொத்தின்வாரைப்பட்டை குறுகியகியாழந்தன்னில், சித்திரமூலச்சாறுசேர்த்தனை திரிபலாதி, வக்கியகியாழந்தன்னில் மத்திக்கவளமைமேநளே. ௩௮

கேளுநீஅமரியோடுகொள்ளுமத்திமத்தி, நாவினில்நாகப்பட்டை நன்றாககியாழஞ்செய்து, வானினில்வெவ்வேறாவர்த்திகரவணிகமாகும், நாளினில்மதுரருக மஃதும்வெவ்வேறதாமே. ௩௯

ஆமினிவகைவகைக்கு அளவதாய்கொண்டுவந்து தாமினிஒவ்வொன்றாகச் சலத்தினிற்கழுவிப்போட்டு ஒமினிவாலேகுத மூறுகாணிந்தசுத்தி, நாமினிமுடிதா ரத்தின் சுத்தியைநவிலக்கேளே. சயி

## முடிதாரத்தின்.

கேளுநீபனேயின்கள்ளு செடியதாய் படிநாலுக் குள், வாளுநீகிழியாய்க்கட்டி வைத்தெரிவளமையாகு ம, வாளிதுகழுவிவைக்க வண்மையாய்நல்லசுத்தி, ஆ ளிதுதாரசிங்கி அதினுடசுத்திகேளே. சக

## தாரசிங்கி.

அதினுடசுத்தியென்ன ஆட்டுநீர் தன்னில்காய்ச் ச, வதனமாங்கொட்டிநாலு வரிசையை வளமாய்க்கே ளு, சுதனமாமுலேப்பாலோடு சுத்தவெள்ளாட்டுப்பா லும், பதனமாய்ஒவ்வொன்றுக்கு நாழிகை பத்துப த்தே. சஉ

## தொட்டிபாஷாணம்.

பத்துபத்தாகவூறிப் பார்த்திடச் சுத்தியாகும், முத்துமுத்தானதொட்டி பாஷாணமுறையைக்கேளு சத்துசத்தாகவெட்டி தாஞெருகிழியாயகட்டி, கொத் துகொத்தாகநெல்லி லவி ததிட்டுகுறியைப்பாரே.

## மடல்துத்தம்.

குறியென்னகழுவிப்போடு கூரியமடலின்சுத்தி நறுவெண்ணையதனிற்போட்டு நாள்ரெண்டுயூறிலாங்

தி, தெறிபடாதயிருக்குள்ளே செறித்திடுநாளொன்று ந்தான், பிறிவெனனகுமரிசாற்றில் மஞ்சளின்சாற்றி லோர்நாள். ௪௪

## துருசி.

நாளொருநாளாயூறக் கழுவியேவுலர்த்திப்போடு பாழொருநல்லசுத்தி பச்சையின்துரிசைக்கேளு, வா ழொருபசுவினீரில் வைத்தெரிபடிநாலுக்குள், சிறுட ன்கழுவிவெய்யல் சிறப்புடன்வுலாவையே. ௪௫

## சாத்திரபேதி.

வைத்திடச் சுத்தியாச்சு மருவிய சாஸ்திரபேதி, கைத்திடுநாரத்தங்காய் சாற்றினிலூரக்கண்டு, பத்தி டக்கழுவிப்போட்டு பார்த்திடநல்லசுத்தி, நத்திடுமஞ் சனக்கல் சுத்தியைநவிலக்கேளே. ௪௬

## அஞ்சனக்கல்-நாகம்.

கேளப்பாபுவியினுரைச் சாற்றினிலூறப்போட் டு, நாளப்பாசென்றபின்பு நல்லதோர்சுத்தியாச்சு, வா ளப்பாநாகசுத்தி மருவியேகேளுகேளு, தாளப்பாநல் லெண்ணெய்க்குள் தானொருநாள்தானூதுமே. ௪௭

## தாம்பரம்.

நாளதாய்ப்பழச்சாறுக்குள்நாழிகைஅறுபதாகும் வேளதாய்கழுவிப்போட்டு வெய்யிலி லுலர்த்தச்சுத் தி, கோளதாய்தாம்பரசுத்தி கூறுவோமின்னங்கேளு,

வேளதாய் அமுரியொன்று விளம்பிய பழச்சாறொ
ன்றே. ௪௮

சாறுடன்சாரங்கூட்டிதாளகந்தானுங்கூட்டி, வீ
றுடன்சலக்கியேதான்வெய்யிலில்பத்துநாள்வை, நீறு
டன்கழுவிப்போடு நிசமதாய்சுத்தியாச்சு, ஆறுடநாக
சுத்தி அறையுறேனறிந்துகொள்ளே. ௪௯

நாகம்.

கொள்ளவேஅமுரிதன்னில் கூட்டிடுகல்லுச்சுன்
னம், உள்ளதுபழச்சாறோடுஉறவிடுஉருவாய்சோத்து
அள்ளதுநாகந்தன்னை ஆட்டுநெய்தனிலுருக்கு, உள்ள
துபததுசாய்க்க நறசுத்தியாகும்பாரே. ௫௰

பாருநீகாந்தஞ்சுத்தி பகருவேன்காணஞ்சாற்றில்
சீருடன்காய்ச்சித் தோய்க்கச் சிறப்புட னேமுகாச்சு,
வாருநீகழுவிவைகக வண்மையாய்நல்லசுத்தி, ஆருந்
காரியததின் சுத்தியை அறிவாய்க்கேளே. ௫௧

கருவங்கம்.

அறிவதுவெள்ளாட்டுநீர் அதினுடன் பிரண்டை
பின்வேர், சிறிவதுஅரைத்துப்போட்டுசிறக்கநல்லெ
ண்ணெய்குத்தி, குறியுடனுருக்கிச்சாய்க்கக் குணமு
டன்நீறுமாகு, மறிவதுநல்லசுததி ஆச்சுதுஅளகுள்
ளோர்க்கே, ௫௨

பொன்னிமிளை அப்பிரேகம்.

உள்ளபொன் னிமிளைசுத்தி யுரைக்கிறே னுணர்
வாய்க்கேளு, கள்ளமாங்காடிக்குள்ளே காச்சிமூன்

ஞானந்தான், வெள்ளைக்கல்லசுத்தி வண்மையாமப்பி
ரேகத்தை, உள்ளதுசொன்னேன்காடி தன்னிலேஊ
றப்போடே, ௫௩

கல்மதம்-நேர்வாளம்,

போட்டதுபத்துநாள்தான் புகலுறேன்நல்லசுத்
தி, அட்டதுசல்மதத்தை அழுரியில்சுழுவிப்போடு,தி
ட்டதிகல்லசுத்தி நேர்வாளஞ்சுத்திகேளு, கூட்டது
மேதிச்சாணி குழம்பினிற்கலக்கநன்றே, ௫௪

நன்றதுகிழியாக்கட்டி எரித்திடநன்றாய்க்கேளு,
உண்டதுஉலர்த்திக்கொட்டை உடைபதுள் நஞ்சைப்
போக்கு, சென்றதுகாடிமோரு பழச்சாறுசேர்த்துக்
கொண்டு, பண்டகுபருப்பைபோட்டுபத்துநாள்தன்
னில்வாங்கே, ௫௫

செங்கொட்டை-சிவனதேவர்,

வாங்கியேஉலர்த்திவைக்க வளமையாஞ்சுத்தி
யாச்சு, ஒங்கிசெங்கொட்டைசுத்தி உத்தகத்திலூறப்
போடு, வாங்கிநாளொன்[illegible]றால் உலர்த்தியேவை
த்திடாயே, வாக்குடன்சிவ[illegible]சுத்தி வகையுடனவித
அப்பாலில், ௫௬

பாவினில்அழுக்கிறுவேர் பண்பதாய்சுத்தியாகு
ம், மூலிகையானதெல்லாம அம்முறைப்படியேசுத்தி
இலிங்கபாஷாணங்க ளறுபத்திறுவுஞ்சுத்தி, எலவே
சொல்லிப்போட்டோ மின்னமுஞ் சொல்லுவோமே,

## அறுபததிநாலுசாக்குசுத்தி,

சொல்லுவோமின்னங்கேளு சூட்சமாயேகமாக,
நல்லதோர்சாக்குசுததி விபரததைவிரிததுக்கேளு, ந
ல்லதோமேனிச்சாறு நவின்றதக்காளிச்சாறு, வல்ல
தோர்கையான்சாறு மதணதயின்சாறுதானே, ௫௮

சாறுதான்பழச்சாறோடே தன்னுட னமுரிகூட்
டி, வாறுதான்காடிக்கூட்டி வைததிட்டு மருநதுகேளு,
வீறுதான்உப்புச்சுன்னம் வெடியுப்புகாரஞ்சீனம், கூ
றுதான்பலமொன்றாகக் கூட்டிநீவைததிடாயே, ௫௯

கூட்டியேவைததுக்கொண்டு சாக்சறுபததினாலு
ம், நாட்டியேகிழியாய்க்கட்டிநலமுடன்மண்டலம்வை
தாட்டியாய்சுததியாச்சு சாக்கறுபத்தினாலு, நாட்டினீ
ர்சுததிசெய்யா வயிததியம்நன்றாகாதே, ௬௰

## அஷ்டலோகமாரணம்,

நன்றாகஅஷ்டலோக மாரணம்நவிலக்கேளு,பன்
றான அஷ்டலோகததுக்குப் பாச்சிடுகாரசாரம், வெண்
றாகவீரம்பூரம்வெள்ளையும்வெடியுப்போடு, ஒன்றாகச்
சமனாய்ச்சேர்தது வடிததனைகெந்திச்சூதம், ௬௧

சூதமாமருந்தையெல்லாஞ்சூட்டிடுசமனாய்நீயும்
வாதமாம்பழச்சாறிட்டு மததிததுப்பின்புகேளு, வே
தமாம் அஷ்டலோகம்விதமெல்லாந்தகடாய்தட்டி, வத
மாமினததுக்கெல்லா மிடைக்கிடைமருந்தைப்பூசே,

பூசியேயுலாவைவத்துப் புதுச்சட்டிதனிற்பரப்பி, வாசிமேல்சட்டிமூடி மண்ணெனுஞ்சீலைசெய்து, பேசியேகெசபுடஞ்செய் பெருமையாம்பற்பமாகும், மாசியேலோகமெல்லாம் வகையெல்லாமாகும்பாரே.

பாருநீலோகபற்பம் படிப்படிவெவ்வேருக்ச், சீருடன்செய்துக்கொண்டுதிட மூடன்செந்தூரங்கள், ஆனிசெய்யும்போது அடைவுடன்கூட்டியாட்ட, பாருநீபத்துக்கெல்லாமிதுவெனவிதனைப்பாச்சே. ௯௪

பாச்சுவாய்குளிகைக்கெல்லாம் பரிவுடன்லோகபற்பம், ஆச்சியாமுன்னூலெல்லாமறைந்திட்டபறபம் கூட்டச், சாட்சியாய்சொன்னதெல்லாஞ் சகலத்துக்கிதுவேகூட்டு, வாச்சுதுவயித்தியோர்க்கு வண்மையாயிநத நூலே. ௯௫

நூலினிலாருஞ்சொல்லார் நுணுக்கமாமிந்தப் போக்கு, கால்வழிஅறியமாட்டார் காசினிவயித்தியோர்கள், பாலினில்வெண்மைபோல பாடினேன்பல நூலெல்லாம், நால்வகைநூலும்பார்த்தால் நல்லதோர் விபரமாமே. ௯௬

## லோகச்செந்தூரம்.

விபரமாயஷ்டலோகம் விபாத்தை சொல்வேன் கேளு, அபரமாய்லோகபற்ப மதனிடைகெந்திக்கூட்

டி, சிபர்மாவீரங்கால்தான்சேர்த்துநீபழச்சாற்றாலே, உபாமாய்சாமமாட்டிஉலர்த்தியோர்வில்லைகட்டே.

கட்டியேவிபிற்காய்ந்தால்கனளைதயாமோட்டில் வைத்து, ஆட்டியேஒடுமூடி அப்பனேசீலைசெய்து, மூட்டியேகனபுடத்தில் மூட்டியேஆறக்கண்டு, சேட்டியேயெடுத்துப்பார்த்தால் சிவந்திடும்எருக்கம்பூவே.

பூவதாஞ்செந்தூரத்தைப் பணவிடை புசிக்கத் தேனில், நாவதாம்பத்துநாளில் நன்றாகத்தீரும்நோய்கேள், சாவதாம்பாண்டுரோகம் சார்ந்தகாமாலைபித்தம், பாவதாம்குன்மம்வாய்வு பறந்திடும்பகாக்கேளே.

பறந்திடும்நீர்தோஷங்கள் மகோதரம் பாரிசவாய்வு, இறந்திடும்நீராம்பல்தான் இன்னமும்முடக்கும்வாய்வு, செறிந்திடுவாதபித்த சிலேஷ்பத்தாலுண்டாம்நோய்கள், அறிந்திடுங்கெற்பவாய்வு அறுவகைசூலைபோமே. ௭௰

## காந்தச்செந்தூரம்.

சூலைபோங்செற்பமுண்டாம் சுகமுளசெந்தூரந் தான், ஆலயமாகச்சொல்வோங் காந்தச்செந்தூரந்தன்னைச், சாலவேலோகம்போலேசார்வுசெந்தூரஞ்செய்யே, வாலையாந்தேனிலேகால் மண்டல மருந்தக்கேளே. ௭௧

அருந்தவேவமஞ்சாங்கோடுநீரிழிவுடனேமாறும், திருந்தலே க்ஷயங்களிளை சாகமுஞ் சிரசில்தோஷம், பொருந்தியகிரர்ணிதோஷம் பித்தமும்போகுஞ்சொன்னேம், இருந்திடும்வாய்வுமெல்லா மேகிடுமிதனைக் கண்டால். ௭௨

## காரீயபற்பம்.

கண்டதோர்காரீயத்தின் பற்பத்தைக்கருதிக்கேளு, என்றதோர்பற்பத்துக்கு இடைக்கிடைலிங்கங்கூட்டி, விண்டதோர்பழச்சாற்றாலே சாமமேஅறைத்துவில்லை, ஒண்டவே யுலரவைத்து வோட்டிமே லோடுமூடே. ௭௩

மூடியேசீலைசெய்து முழப்புடமாறினபின், நாடியேபொடித்துவைத்துநல்லதோர்தேனில்கொண்டால் கூடியேகிரந்திசூலை பதினெட்டுகுஷ்டந்தீரும், ஓடியேபிறமேகங்களொழிந்திடுமுண்மைதானே. ௭௪

## வங்கபற்பம்.

உண்மையாய்வங்கபற்பம்உறுதியைச்சொல்லக்கேளு, வண்மையாமீயம்போலே வைத்திடுசெந்தூரந்தான், தண்மையாயநுபானங்கள் தானறிந்துண்பாயாகில், கன்மமாய்உடலிலுள்ள வியாதிகள்காணுதெண்ணே. ௭௫

## தாம்பிரபற்பம்.

எண்ணவேதாம்பிரத்திலிடைக்கிடைகெந்திகூட்டி, உண்ணவேஎருக்கம்பாலிலூறவைத்துலரவைத்து

துண்ணவேயோட்டில்வைத்துத் துலங்கவேயோடுமூ
டி,மண்ணதுசிலைசெய்து கெசபுடமாட்டிப்போடே.

போட்டெடு ஆறின்பின்பு கவ்மயில்கழுத்தாம்வ
ர்ணம், நாட்டிடுதேனிற்கொள்ளப் பணவிடைநயந்து
பாரு, காட்டிடுபத்துநாளில்கடுகியகுன்மமெட்டும், ஊ
ட்டிடுஞ்சகலநோயு மோட்டெடுத்தோடும்பாரே.

## வெள்ளிபற்பம்.

ஓட்டிடும்வெப்புபாலை நீராம்பல்மகோதரங்கள்
கூட்டிடுந்திரண்டவாய்வு சூலைத்தோடுங்கூர்மைசேரு,
ஆட்டிடுவெள்ளிபற்பமதனிடைகெந்திகூட்டி,நாட்டிடு
பழச்சாற்றுலேநயந்தரைசாமம்நாலே. எ௮

நாவினில்வில்லைசெய்து இரவியினிலுராய்போடு
ஆவினினிலையைப்போலே அடையைததான்வைத்து
மூடி, மாவினில்சீலைசெய்து வைத்திடுகெசபுடங்கான்,
பாவினில் மூத்துப்போலே பவளம்போல் சிவந்து
போமே. எகூ

சிவந்திடுஞ்செந்தூரத்தைதப் பணவிடைதின்பீரா
கில், சிவந்திடும்நோய்களுக்கு அனுபானமறிந்துசெய்
யில்,சிவந்திடுநோய்களெல்லாங்கடலிலேயோடிப்போ
கும், சிவந்தலைந்தேகுதற்குச் சூட்சத்தைதப்பகர்ந்திட்
டேனே. ௮௰

## தங்கபற்பம்.

இட்டதோர்தங்கபற்ப மிடைக்கிடை கெந்திகூட்டி, திட்டமாய்சூதங்கூட்டி சிவந்திடப்பழச்சாறூட்டி, வட்டமாய்வில்லைசெய்து ரவியினில்வைத்துலர்த்தி, மட்டமாய்ஓட்டில்வைத்துமறுபடியோடுமூடே.

மூடியேசீலைமண்செய் முக்கியங் கெசபுடத்தில், வாடியேமயங்கவேண்டாம் வயித்தியர்களேகேளுங்கள், நாடியேசெந்தூரந்தான் பணவிடைநல்குவீரேல், கூடியேசன்னிவாதங்குலைகுலைந்தேகுமன்றே. அ௨

ஏகுமே சுரங்களெல்லா மிளைத்திடு மீளைகாசம், போகுமேமேகசூலை புண்புரைசிலந்திகுஷ்டம், ஆகுமேகுன்மம்வாய்வு அனலெழுவாட்சிகாந்தல், வாகுமேக்ஷயரோகங்கள் பித்தமும்வாங்குமன்றே. அ௩

## லோககுளிகை.

வாங்கிடுஞ் செந்தூரத்தின் வரிசைக ளெல்லாஞ் சொன்னேன், பாங்குடன்குளிகைசெய்யும் வரிசைதான்பகாககேளு, ஓங்கியதங்கம்வங்க முறுதியாமீயம் வெள்ளி, தீங்கிலாதாம்பிரம்லோகம் செய்திடுசெந்தூரந்தான். அச

தாணிதுவகைக்கழஞ்சிசெந்தூரஞ்சரியாய்தூக்கு
மானரிதாரங்கெந்திமனோசிலைவீரஞ்சூதம், ஆனதோ
ர்லிங்கங்காரம் அதுவகைகழஞ்சியொன்று, நானிதுக
ல்வத்திட்டுப் பழச்சாற்றில்சாமமொன்றே. அ௫

ஒண்ணெனஆட்டிமத்திக் கயறுபோலுருட்டிநீள
ம், பண்ணதுபூசைசெய்து பரிவுடன்நிழலில்காய்ந்தா
ல, அண்ணதுசெப்பில்வைத்து ஆட்டெல்லா மாடக்
கேளு,நண்ணதுநாட்டிலுள்ள நாடகமாட்டுவோமே.

ஆட்டுவதென்னவென்று லடைவுடனிஞ்சிச்சாற்
றில், கூட்டியேமுலைப்பாலோடு கொடுத்திடச் சன்னி
யேது, நாட்டினில்சுரங்களேது நவின்றிடும்வாதமேது
வாட்டிடுசிலேஷ்பமேது மயங்கியபித்தமேதே.

ஏதென்றுளைகாச மிளைப்புடன்க்ஷயங்கள்மேக
ம், வாதென்றுவந்தகுன்மம் வாய்வுடன்வாட்சிகாந்த
ம்,மாதாக்கள்செற்பரோகமசனமாம்வாந்திவிக்கல்,ஊ
துகாமாலைபாண்டு வுள்மூலமுளையுமெண்ணே. அஅ

உளவுசெய்கிறுணிகுலை உறுதிநீரிழிவுகுஷ்டம்,
சளவுசெய்கண்ணோயோடு கடிவிஷ நோய்கள்பின்னு
ம், அளவிலாநோய்களெல்லா மகன்றிடுமிதனைக்கண்
டால், தளவிதைஅறிந்துசெய்தால் தாணியில்நோய்
நில்லாதே. அ௯

நில்லாதநோய்களென்ற நிச்சயமெதினாலென்று
ல், வலலாதஅஷ்டலோகம் மாரணம்பண்ணாதாலே,
செல்லாதமாரணத்தைச் செந்தூரச்செய்கையாலே,
சொல்லாதசூட்சந்தன்னைச் சொல்லியவறுதியாலே.

சொல்லிய சூட்சந்தன்னைச் சோதனையாகக்கண்
டால், சொல்லியகன்மமெல்லாந்துலைத்திடுஞ்சூட்சஞ்
சூட்சம், சொல்லிய சூட்சமெல்லாஞ் சோதியதாகச்
சொன்னேனென், சொல்லியநூலுக்கெல்லாஞ் சுருதியா
மிந்தநூலே. ௩௧

நூலெல்லாங்கண்டுதேர்ந்தால் நுணுக்கங்கள்பல
வுந்தோணும், சாலவேசாக்குசுத்தி சாற்றியகன்மசூத்
திரம், எலவேஅஷ்டலோக மாரணமியம்பினோம்நாம்,
பாலதுபோலாமிந்நூல் பலவதுமுந்நூலன்றே.

முந்நூறுமுப்பத்தாறுமுதுமொழிகன்மசூத்திர
ம், முந்நூறும் நூற்றன்பதுமுறையுடன்முடிவதாகும்
மூன்னூல்தானாயிரத்திருநூறுமறுநூறாகும், மூன்னூ
ல்தானாயிரத்தை அதிகமாய்மொழிந்தவாறே. ௩௩

வாறுகேள்மூன்னூலாய்ந்துவடமொழிதமிழாற்
செய்தேன், வாறுகேள்வாதம்யோகம்ஞானமூம்வகை
யாய்ச்சொன்னேனென், வாறுகேள்ஆயிரத்தில்வயித்தியம

திகஞ்சொன்னேன், வாறுகேளந் நூலெல்லாம் வகை
யுடனாய்ந்துபாரே. கூச

பாய்ந்துநீ முன்னூலெல்லா மறிந்துநீ பார்த்தா
யானால், தோய்ந்திடும்வாதம்ஞானம்வயித்தியம்லோ
கபற்பம், ஆய்ந்திடுலோகத்தோர்க்குப் பிணியில்லைம
ரணமில்லை, ஆய்ந்திட்டப்பாலேநீதான் பாவத்தினிவி
ர்த்திபாரே. கரு

பாவத்தை நிவிர்த்திசெய்து வயித்தியம்பரிந்து
செய்நீ, சாபத்துநிவிர்த்திதன்னைச் சாற்றினேமுந்நூ
லுள்ளே, ஆபத்துக்குதவிசெய்யு மறிவுள்ளவயித்தி
யோரே, சிவததினாலுறுதியாகச் சிவபூசைதிருந்தச்
செய்யே. கசா

செய்வதுவயித்தியந்தான் வடுகனைச்சிறந்துபூசி,
கைவருமஷ்டகன்மம் சிதம்பரங்கருதிப்பாரு,உய்வது
மெல்லாஞ்சுத்தி நாடியிலுறுதியாலே, கையபின்னுட
லில்வந்த களவதும்நாடியாலே. கஎ

நாடிதானறியவேணும்நயத்தினைக்காணவேணும்
வாடியேமயங்கவேண்டா மருந்தினுகமத்தைக்கேளு,
கூடியசிதம்பரத்தைக்குணமுடனெழுதிக்கட்டி, நீடிய
வஷ்டகன்மஞ் செய்திடநிவிர்த்திகேளே. கஅ

## கடுக்காய்லேகியம்.

கேளுநீ கடுக்காய்நூறு பலமது கியாழத்துக்கு,
வாளுநீயிடித்துத்தோண்டி வைததிடு நாழிக்குள்ளே,

தாளுநீதூணிவெள்ளஞ் சலமதுசரியாய்விட்டு, ஆளு
நீயெட்டொன்ருக அதுதனைவடித்துவாங்கே. கூகூ

வாங்கியகியாழத்துக்கு மருந்துநீமருவிக்கேளு,
ஓங்கியசிவதையிஞ்சி உத்தமமிளகுவோமம், பாங்கு
ள்ளகடுக்காய்திப்பிலி() பஞ்சதாரையுமாக, ஆங்கிதை
அரைத்துப்போட்டு ஆவின்நெய்படிதாளுமே. ஙா

ஆமிதுகியாழத்துக்குப் பலமதுஅரைத்துப்போ
டு, வாமிதுபரகுபோல வற்றியபோதுநெய்யை,ஓமிது
விட்டுக்கிண்டி உறுதியாய்லேகியத்தைத், தாமிதுபத
னம்பண்ணிப் புன்னைக்காயளவுதானே. ஙாக

அளவதாயுருட்டிக்கொள்ள அக்கினிமந்தஞ்சூலை
குளவதாமலசலங்கள் கூடியவாய்வுபத்து, களவதாமூ
லமாறும் கடியதாய்திருமென்று, பழுதிலாமுனிவன்
சொன்ன அரிதகிபரிந்துபாரே. ஙாஉ

## வேறு, நெல்லிக்காய்லேகியம்.

பாருநீநெல்லிக்காய் கியாழந்தன்னில் பரிவாகப்
போடுதற்குவிபாகங்கேளு, தாருநீபலம்நூறு நெல்லிக்
காய்க்குத் தானதூணிநீர்விட்டு வற்றக்காச்சி, வாருநீ
யெட்டொன்ருய்வடித்துக்கொண்டு வகையாகச்சட்டி
யிலேவைத்துக்கேளு, சீருடனேமருந்துவகைசெப்பு
வேன்கேள் திப்பிலியுநல்லசுக்குமிளகுமாமே. ஙாங

() பஞ்சதாரை என்பது - சர்க்கரை.

## வேறு.

சுக்குடனேமூலம் கிரும்புகைச் சோளம்வலம்,
குக்கிலும்வாய்விளங்கம் சிரகங்கொத்தமல்லி, உக்கு
வாய்விளங்கமொன்று கூரைநீர்மதுரமுந்தான், சர்க்க
ரைபலமும்பத்து தானதுகரைத்துக்கொள்ளே. ௯௪

கரைத்திடுமருந்தையெல்லாம் கியாழத்தில்கரை
த்துக்காச்சி, உரைத்திடும்பாகுசேரில் ஒருபடிநெய்
யைவிட்டு, நிரைத்திடுகிண்டிக்கிண்டி நேர்மெழுகது
போல்வாங்கி, பரைத்திடும்பதனம்பண்ணி பாக்கள
வாய்நீகொள்ளே. ௯௫

பாக்கதுவாகக்கொள்ள பகரரைமண்டலங்கேள்,
ஊக்குள்ளமேகமஸ்தி சுரமுடனழலைகாந்தி, போக்கு
ள்ளகிராணிவாய்வு பொருமலுமிருமலோடு, சீக்குள்ள
க்ஷயமுமீளை சிலேற்பனமாண்டுபோமே. ௯௬

## தாணிக்காய்லேகியம்.

போமது தாணிக்காயின் லேகியம்புகலக்கேளு,
ஆமதுபலந்தான்நூறு அவித்ததைத்தூணிநீரில், ஏம
துவெட்டொன்றுக்கி விடையமுஞ்சாதிக்காயும், தாம
து அபினிகஞ்சா தான்பலமொன்றதாமே. ௯௭

ஒன்றெனுமருந்தையெல்லாமுறவாகத்தூளுசெ
,ய்து நன்றதாஞ்சீனிபத்து பலமதுநவிலக்கேளு, கண்

ட்னகியாழந்தன்னில்கரைத்துப்பாகதிலேசேரில், வெ
ன்றதுகுராணத்தை பாச்சிநெய்யூத்திககிண்டே. ௫௮

கிண்டியேமெழுகுபோல பதத்திலிறக்கிவை
த்து, மண்டலங்கொள்வீராகில் வயிற்றினில்பொரும
ல்வாய்வு, அண்டியகடுப்புசெத்தமஸ்திசூரங்கிருணிமூல
ம், பண்டுள்ளவாயுவோடு வுஷ்டிணமும்பறந்துபோமே.

சுக்குலேகியம்.

பறந்திடுமென்று சொன்னோம் பகர்சுக்குலேகிய
ங்கேள், சிறந்திடுமிந்தலேகியம் குணந்தனை யென்ன
சொல்வேன், உரைத்திடுஞ்சுக்குநாறுபலமதுஉகந்து
வாங்கி, அரைத்திடு சலந்தான்தூணி யதிலிட்டெட்
டொன்றுக்கே. ௫௰

ஆக்கியேபனையின்வெல்ல மதனிடைபலந்தான்
பத்து, தாக்கியேகரைத்துக்கொண்டுதானதுபாகுசே
ரில், நோக்கியேயிதனுக்குள்ளே நுகர்நதனைச்சொல்
லக்கேளு, தூக்கியேபடிதானேமம் கருதின்வேம்பிலை
யின்தூளே. ௫௰௧

தூள்வகைரெண்டுங்கூட்டி தூவியேகிண்டிக்கிண்
டி, ஆளதுஆவினெய்தான் அரைப்படிகூடவிட்டு, கூள
தபோலேவாங்கிக்கொள்வதுபுன்னைக்காயாம், நாளது
நாற்பதுக்குள் நவிலுறேன்தீரும்நோய்கேள். ௫௰௨

திரும்நோய்கிறாணிமூலம் தெசவாய்வுஅதிசாரங்கள், வாருநீகடுப்புமொத்தம் பாரிசவாய்வுதீரும், சேருநீர்பொருமல்மந்தஞ் செரியாமையுள்ளேப்பங்கள், ஆறுமே அறியச்சொன்னேனும் அகன்றிடும் அறிந்துகொள்ளே. ௱௰௩

## மிளகுலேகியம்.

அறிந்துகொள்மிளகுலேகியம் அதில்நூறுபலந்தான்வாங்கி, செறிந்துகொள்தூணிநீரில் சிக்கெனவெட்டொன்றாக்கி, பறிந்திடுகற்கண்டப்பா பலமதுபத்துப்போட்டு, முறிந்திடக்கிண்டிக்காச்சிப்பாகுபோல் வாங்குமுன்னே. ௱௰௪

முன்னதுஅரத்தைஅக்கிரு சீரகமுதுகிரும்பு, வன்னதுவேலங்கோஷ்டமகிகமாமதுரந்தேற்றான், பன்னதுவாய்விளங்கம் பத்திரிநருக்குமூலம், சொன்னதுவகையொன்றுக்குப் பலமதாய்தூக்கிடாயே. ௱௰௫

தூக்கியேபொடித்துக்கொண்டு பாகினில்தூவிக்கிண்டு, ஆக்கியேநறுநெய்நாழி யதிற்பாதிதேனுமாகும், பாக்கியேமெழுகுவென்னும் பதத்தினிலிதனைவாங்கி, நோக்கியே வைத்துக்கொண்டு நுணுக்கத்தைச்சொல்லக்கேளே. ௱௰௬

சொல்லக்கேள்தீரும்நோய்தான் சிலேஷ்பனந் தொண்ணூற்றாறும், வெல்லக்கேள் பொருமல்வாய்வு அக்கினிமந்தத்தோடு, நல்லக்கேள்சூடுகாந்தல் நலமுடன்சுரமுமஸ்தி, வல்லக்கேள்கபங்களீளைவாய்வதுவாய்ங்குந்தானே.

வாங்குதிப்பிலிதான்நூறு பலமதுதூணிநீரில், வாங்கயேயெட்டொன்றாக்கி மருந்தினையுரைக்சக்கேளு, பாங்குகற்கண்டுபத்துப்பலமதுபாகுசெய்து, ஆங்குசுக்கொடுகடுக்கா யாத்தைஅக்கிறாகாரமோமம்.

## சீரகலேகியம்.

ஓமமுஞ்சீரகந்தான் உற்றதோர் கொத்தமல்லி, சாமமேவெட்பாலோடு செண்பகப்பூவுங்கோஷ்டம், நாமமேவகையொன்றுகசூநலமுடன்பலந்தான்வாங்கி பாமமேயிடித்துத்தூளாம் பாகினில்கண்டுவாரே.

வார்த்திடுநெய்யுந்தேனும்வகைவகைஉரியுழக்கு சார்த்திடுமெழுகுபோலேதானதுவாங்கிவைத்து, கார்த்திடுந்தாணிக்காயின் அளவாகக்கருதியுண்ண, மாய்த்திடும்பிணிகளெல்லா மண்டலந்தன்னிற்கேளே.

தன்னிய சிலேஷ்பனந்தான் தட்டழிந்தோடிப் போகும், மன்னியவாதம்போகு மதிசாரகிருமல்போ

கும், உன்னியவாய்வுதிரு முப்பிசமாந்தந்திரும், பன் ணியயீளைகாசம் பயப்படும்பாருபாரே. ௱௨௧

பாருமுக்கடுகுஞ் சொன்னேன் பகர்திரிபலையுஞ் சொன்னேன், ஆருவெள்ளுள்ளிப்போக்கை அறையு றேன்ஐங்காயத்தை, சீருடன்பலம்நூறப்பா செலமது தூணிக்காய்ந்து, ஆகுமேயெட்டொன்றாக்கி வடித்திடு மருந்துகேளே. ௱௨௨

மருந்துஐங்காயஞ்சுக்கு வால்மிளகுஇந்துப்பு,தி ருந்தியவலமஓமந் திப்பிலிமிளகுசீராம், விருந்தியதிரி பலைவெட்பாலை விடையமும்பலமதாக, பொருந்திய வாய்விளங்கம் வோட்டிடுஞ்சீனிபோடே. ௱௨௩

போட்டிடுசீனிதானும் புகழுடன் பாகுசெய்து, மாட்டிடுசூரணத்தை வார்த்திடுபசுவின்நெய்பால், நா ட்டியேபடிகாலாகும் நவின்றிடுமருந்தொன்றாக, காட் டிடுமெழுகுபோல கட்டிடுபுன்னைக்காயே. ௱௨௪

சாயதுவாகவுண்டால் கழன்றிடும் வியாதியெல் லாம், நோயெதுவாய்வுவாதம் நொடியினிற் பறந்து போகும், ஆயதுகுன்மமென்று மகன்றிடு மின்னஞ் சொல்வேன், நீயதுகண்டுகொள்ளு நிச்சயஞ்சொல்ல க்கேளே. ௱௨௫

## கடுகுலேகியம்.

சொல்லியகடுகுநூறு பலமதுதூக்கிகொண்டு,
நல்லதுதூணிநீரில் நவிலுவன்எட்டொன்றாக்கி, தள்
ளியகருப்புக்கட்டித் தான்பலம்பத்துசேர்த்து,அல்லி
யபாகுசெய்து அதிலிடுமருந்துகேளே. ௱௨௬

கேட்பதுஓமஞ்சுக்கு திப்பிலிகிருமியாயம், நா
ள்பதுகொத்தமல்லிசிரகம்நவிலக்கேளு, தாள்பதுவா
ய்விளங்கமஞ்சளும்விடையந்தானும்,வேள்படவகை
யொன்றுக்குப் பலமொன்றுவறுத்துகூட்டே.

கூட்டியே பொடித்துத்தூளாய் குலவியபாகில்
சேர்த்து, காட்டியநல்லெண்ணெய்தான் கால்படிக்கல
ந்துகிண்டி, நாட்டியேமெழுகுபோல நயம்படவழித்
துவைத்து, நீட்டியபுன்னைக்காயளவா யருந்திடச்சிட்
சைகேளே. ௱௨௮

சிட்சையாமூலரோகம் வாய்வுடன்திரட்சிதானு
ம், சிட்சையாம்புளித்தேப்பங்கள் செரியாமைபொ
ருமல்தானும், பட்சியாங்குன்மம்வாய்வு பகருமல்ச
லங்கள்ரத்தம், வெட்சியாம்புழுக்கள்தீரும் வெந்தி
யம்பரிந்துகொள்ளே. ௱௨௯

## வெந்தியலேகியம்.

பரிந்தவெந்தியந்தானப்பா பலமதுநூறுவாங்கி,
அரிந்திடுசலந்தான்தூணி யதில்விடுஎட்டொன்றாக்

கி, தெரிந்திடும்பஞ்சதாரை சிறந்திடப்பலந்தான்பத்
து, திருந்திடக்கரைத்துப்பாகாய் சேர்த்துமேல்மருந்
துகாணே. ௱௯௰

காணஇபத்திரங்கோஷ்டம் கசகசாசீரகந்தான், பூ
ணதிவிடயமோமம் சாதிக்காய்கிராம்புவோடு, தாண
வேகஞ்சாசரக்குருகுரோசானிபலமாய் தூக்கி, ஊணவே
பொடித்துக்கொண்டு வறவிடுபாங்கில்தானே.

பாங்கினில்நறுநெய்நாழி பாலதும்விட்டுக்கிண்டி
வாங்குநீமெழுகுபோலே வழித்துநீவைத்துக்கொண்
டு, அகினிக்கடுப்புக்கெல்லா மூட்டிடுகழஞ்சிவீதம்,
அக்கினிகிராணியென்றவகையெல்லாமகன்றுபோமே

ஓமலேகியம்.

அகன்றிடும்ஓமலேகியம் அறையுறேன்பலம்நூறப்பா
புகன்றிடுஞ் சலந்தான்தூணி புகட்டியேயெட்டொன்
றுக்கி, பகன்றிடுஞ்சர்க்கரையும் பலம்பத்து வாங்கிவ
ந்து, நீகன்றிடும்பாகும்செய்துநிச்சயமருந்துகேளே.

சொல்லக்கேள் அமுக்கிறுவேர் குக்கிலுஞ்சினப்
பாவும், நல்லக்கேள்கார்கோலோடு நாட்டிடவகைபல
ந்தான், அல்லகேள்ஞாணத்தை அப்பனேஅதனில்
பாச்சு, வெல்லக்கேள்நறுநெய்நாழி விட்டதில்கிண்டி
வாங்கே. ௱௯௪

வாங்கியேகழஞ்சுவீத மண்டலங்கொள்வீராகில்
ஓங்கிடும்பறங்கிசூலை உலர்த்திடுஞ்சிரங்குகுஷ்டம்,தா
ங்கியகிரந்திபுண்கள் சார்ந்திடுஞ்சில்விஷங்கள், ஈங்கிவை
மானவாய்வு வாதமுமேகுமன்றே. ௧௩௫

ஏகுமேகாயந்தன்னை யியம்புறேனின்னங்கேளு,
பாகுசேர்சோமனாதி பலமது இருபத்தஞ்சு, வாகுமே
துணிநீரில் வாட்டியேயெட்டொன்றாக்கி, ஆகுமேசீ
னிபத்துப் பலமதுவிதனிற்பாச்சே. ௧௩௬

## பெருங்காயலேகியம்.

பாச்சியேபாகுசெய்துபரிந்திடுமருந்துகேளு,ஆ
ச்சியேவெள்வெங்காயங் கடுகுடன்மிளகுஞ்சுக்கு,வா
ச்சியேதிப்பிலியோமம் சீரகமதாங்கோஷ்டம், ஆச்சி
யேபலமொன்றாக ஆவினெய்ப்படிகால்வாரே. ௧௩௭

காலதுவார்த்துக்கிண்டிகாய்ந்துமேமெழுகதானா
ல், சாலவேவழித்துவைத்துத்தான்தினங்கழஞ்சிவீத
ம், ஏலவேகொள்வீரானா லியம்புறேந்தீரும்நோயை,
ஓலமாய்வாய்வுவாதமோடிடுமுண்மைதானே. ௧௩௮

உண்மையாமருந்துகொண்டால் பத்தியமுறைக்
கக்கேளு, கன்மநன்மிளகுமஞ்சள்சீரகங்கருதிக்கொள்

ளு,தண்மையாங்கறிவகைகள் சாற்றுரோந்தரணியோர்க்கு, வண்மையாமுருங்கைப்பிஞ்சும் வழுதலைப்பிஞ்சுமாமே. ௧௩௯

பிஞ்சொடுவாழைக்காயும் பிசகிலாசிறுக்கீரையும் அஞ்சியேபொன்னாங்காணிஅவரையின்பிஞ்சுமத்திதுஞ்சிடுந்தூதளங்காய்துவரைநெல்லிக்காயோடு, கொஞ்சியமுசுட்டைக்கீரைகொண்டிடகுணமதாமே.

குணமதாம் பால்நெய்மோரு குறுமயிலுடும்பு காடை, பணமதாய்வெள்ளாட்டுவற்றல் பகர்ந்திடுகவுதாரியுங், கணமதாமுடும்புமுள்ளான்கடல்மீனில்சுதும்புகிழங்கான்,நிணமதாம்ஆமைவிராலும்நீந்திடுமுளுவைதானே. ௧௪௧

உளுவையுஞ்சுளுதிருக்கைநெத்திலிஉறுதியாதும், பழுதிலாவிதுகளெல்லாம் பகர்ந்திட்டோம்பொதுவாய்த்தானே, எழுதியநோய்கள்கண்டுஎடுத்துக்கொள்இன்னதென்று, கொழுகியபத்தியந்தனைக் கூறினோங்கூட்டிக்கொள்ளே. ௧௪௨

## லோககுளிகை.

கொள்வதுலோகபற்பம் கூறியவகை வகைக்கு, அள்வதுஇடைக்குக்கெந்தியதிலிடுகழஞ்சிவிதம்,தள்வதுகுமரிச்சாற்றால் தானரைத்துண்டைசெய்து, நள்வதுசெப்புக்கிண்ணமதிலிட்டுரவியில்வையே.

இரவிதனில்வைத்தபின்பு நாழிகைபதினொன்று
னால், கவியவேதிப்பிடித்துக்கனலதுபுகையுங்காணும்
அவியவேகண்டெடுத்து அப்புறம் நெற்குள்வைத்து,
புவியிலேபத்துநாள்சென் றெடுத்துநீபுதுமைகேளே,

புதுமைகேளதுதப்பாமல்போட்டுவைவெவ்வே
றாக, எதுமையாநோய்கட்கெல்லா மின்னங்கண்டுகரு
திப்பார்த்து, அதுமையாமனுபானங்க ளதுக்கும்வெ
வ்வேறதாகப், புதுமையாம்பற்பங்கள்தான் பாச்சிடு
வியாதிகண்டே. ௧௪௫

கண்டுகொள்ளஷ்டகன்மம் மாரணங்கடந்தமந்தி
ரம், கண்டுகொள்கன்மசூஸ்திரம்பகர்ந்திடுமிதுவுமொ
ப்பு, என்றுசொல்மனுஷர்பேரி லெதிர்த்திடும்வியாதி
யெல்லாம், முண்டுதமூன்றுபேர்க்குமுறைந்திடுந்தே
கந்தானே. ௧௪௬

தேகந்தான்வலுத்துப்போச்சு தேசத்தின்வழித்
தியோரே, ஆகமேவருத்துதென்று தன்மத்தையகன்
றிடாதே, பாகமேஅறிந்துசெய்தால் பலித்திடுங்கரு
வும்வேண்டாம், நாகமேயணிந்தமூர்த்தி நவின்றதை
நாம்சொன்னோமே, ௧௪௭

மேல்தாம்லோகபற்ப மிருக்ததோர் சொர்ணபற்
ப்ம், சாலவேரெண்டுமொன்றாய்ச்சமனிடையாகத்தூ
க்கி, பாலதாம்வீரம்லிங்கம் பாச்சிடைக்கிடையதாக,
வாலிப்பாப் உமிழநீராலேமத்தித்துவில்லைகட்டே.

கட்டியவில்லைதன்னைக் காய்ந்தபின்ஓட்டில்வைத்
து,வட்டமாயோடுமூடிவகையுடன்சீலைசெய்து,திட்ட
மாய்குக்கிடத்தில் சிவந்துநீரிப்போகும், எட்டமாம்
வெள்ளிசெம்பில்எழுமையிதுசொன்னோமே. ௧௪௯

சொன்னது தொகைதானூற்று அன்பதுசூட்ச
மாகும், மூன்னமேசொன்னநூலில்முக்கியமிந்நூல்சூ
ட்சம், வன்னமேலாறுலோகமாரணமதிசூட்சம், மு
ன்னமேசொன்னநூற்றி யைப்பதுசூத்திரமுற்றே.

கன்மசூத்திரம்

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

# சூதமுனி நாடி - ௫௰

———)-(———

வாதமதுமுன்னெழுந்துதாழ்ந்துசற்றே மயிலது போல்நடைநடந்துமங்குமாகில், சேதமது இல்லையென்பத்தாறுமாண்டிற் செப்பலாமரணமென்று தீர்க்கமாக, நாதமதுகுறைந்துவிட்டில்போலேகண்டால் நாளெட்டில்மரணமென்றுநவிலலாகும், பேதமதுஇல்லையிதுபிசகிடாமல்பெரியவனுஞ்சூதமுனிபேசுங்காலே.

காலானபித்தமதுதுடியேகண்டு கனலெழுந்துவந்திடுகில்சிதமாச்சு, மாலாகிலும்பார்க்கமருந்துமில்லை மாரணமதுமூன்றுதிங்கள்வரிசையாகும், நாலானபித்தமதுதொங்கத்தொங்கிநடைநடந்துபாம்பதுபோல்நடக்குமாகில், மேலானபதிமூன்றுந்திங்கள்தன்னில்விற்றிருந்தகூட்டழியும்விரும்பிப்பாரே, ௨

பார்ப்பாவபித்தியனே மரணநாடி பாங்குடனே சொல்லுகிறேன்பாரின்மீது, சேப்பாசீதமதுசிலேத்துமமாகும் சிலறியேயாமைபோல்நடந்துதானால், சூ.டப்பாசாவுபதினென்றுமாண்டில் குறையில்லை நண்ட

துபோல்நடந்துதானால், மாரப்பாநாள்வந்துதென்று
சொல்லி மருந்துகளையருந்தாமலிருந்திட்டேரே, ௩

இருந்திடவேயின்னமொருகுறிதான்கேளு இய
ல்பானவாதமதுகீழேநோக்கி, லருந்திடவேமேலேகி
நடக்குமாகி லப்பனேயன்பதுநாளாகுமென்ன, மரிந்
திடவேபித்தமதுதொங்கிச்சற்றே மணிநாக்குஅசைவ
துபோலசையுமாகில்,சுரந்திடவேவீக்கமதுகழிச்சலா
கிச் சோர்வுடனேவைகுந்தஞ்சுகமதாமே, ௪

ஆமடாகண்சிவந்துசுழித்துவாங்கி யறிவுகெட்டு
மதிமயங்கியோசைகுன்றிற்,போமடா ஆறுநாள்சீவன்
போகும் போதமதுநின்றுசற்றே பேசுமாகில், நாம
டாபித்தமதுவீழவில்லைநப்பரிதுவம்புவரும்நாடாதே
கேள், சாமடாமூன்றுநாள்சீவன்போகும் சக்காமும
றுதியென்றேசாற்றலாமே, ௫

சாற்றுகிறேன்வாதபித்த சிலேத்தும மென்றுஞ்
சார்வானதசநாடிபத்துண்டென்றும், ஏற்றுகிறேனோர்
விரலுக்கிரண்டுநாடி யியலானஐவிரற்குப் பத்துநாடி,
மாற்றுகிறேனங்குஷ்டவிரலுக்குத்தான் வகுத்தறிவீ
ர்பிராணனொடு அபானன்றனும், போற்றுகிறேன்தற்
சனியாம்விரலுக்குத்தான் புகழ்பெரியவுதானனொடு
வியானனுமே, ௬

ஆகுமேமத்திமையாய்விரலிற்றானே அடுத்துநி
ன்றகூர்மனேநோக்காதானும், போகுமே அனுமிய
னும்விரலிற்றானும் புகழ்பெரியசமானனோடுகிரிகான்
றான், ஏகுமேகனிஷ்டகவிரலில்தானே யியல்பானதே
வதெனோடுதனஞ்செயன்றான், தாகுமேயிப்படியேவிரலி
ல்தானுந் தானிருக்குந் தனஞ்செயன்றான் சமான
னாமே, ௭

தனஞ்செயனுந்தசவாய்வுபத்ததாகுஞ் சாற்றுகி
றேன்தசநாடிமுன்போலேதான், தனஞ்செயனுமிடை
யிலோடும்பிங்கலையுமாகுஞ் சாட்டிநின்றசுழிமுனைசிங்
குவையுமாகுந், தனஞ்சயனும்புருடனங்காந்தாரனோ
டுதனித்துநின்றஅசுவினிஅலம்புருடனுகு, தனஞ்செ
யனுஞ்சங்குனியுங்குருதனோடுவகுத்துநின்றதசநாடி
பத்ததாமே, ௮

பத்தாகும்வாதபித்தசிலேத்துமமூன்றும் பக்கு
வங்கள்தப்பியேபதறுமாகில், வத்தாதசீதமதுவந்து
தோன்றில் வறட்சியுடன்விக்கலது குளிர்ச்சிமேவும்,
எத்ாதஇளைப்புடனேபேசசுமில்லை யிசுமானவாதம
துவிழுந்துதென்றால், அத்தமவர்க்கிருபத்தோர் நாளி
ல்சாவா மாதியந்தம்பித்தமதைப்பிறிந்துபாரே, ௯

பிறிந்துபார்பித்தமது அசைவுநின்றால் பேசரிது
மரணமதுநிமிஷமாகும், தெரிந்துபார்சிலேத்துமமது
வசைவுநின்றால் தேகம்விட்டேகிவிடு மிருபதாநாள்,

குறிந்துபார்பித்தமொடு வாதங்கூடில் குறிசொல்வே
னெழிரண்டிற்குறைந்துபோமே, ௰

குறைந்துபோம் வாதமொடு சிதங்கூடிற் கூட்டி
லேமாற்றிவிடுஞ் சயத்தைதானும், னிறைந்துபோங்
கபவேளையிரைப்புமாகும் நெஞ்சடைக்குங்காதடைக்
கும்நில்லைமையில்லை, மறைந்துபோம்பித்தமதில் வாத
ஞ்சேரில் வலிதேன்மப்வாந்தியுமாம்அன்னந்தள்ளும்,
உறைந்துபோமின்னமொருகுறியைசசொல்வேன் உ
யிர்நிலைக்குவிரதநிலை உரைக்கிறேனே, ௰௧

உரைக்கிறேன்சிதத்தில் வாதங்கூடி லுதிரவலி
கொண்டுமிகவுடம்புவிங்கும், நிரைக்கிறேன்பித்தமது
வசைவுகண்டால் நெஞ்சுவலிபிறவலிப்புநெஞ்சுக்குத
து, மரைக்கிறேநீரேழில்மரணமாவார் மண்டைதனி
லெரியெழும்பிவழியைப்பார்க்கும், அறைக்கிறதோர்
மருந்துதனைச்செல்லவொட்டா தாக்கரிதுகொள்ளும
டாவதின்பேர்கேளே, ௰௨

கேளப்பாமூன்றுமிகவசைவுநின்று கெடியானா
விமூன்றில்துடிப்புக்காண்கில், நாளப்பாசூசினததிற
சூடுகொள்ளும் நலமானமூத்திரமுஞ் சிறுத்துப்போ
குந்; தாளப்பாபிராணவலியெரிவுகுததுச் சரீரத்தில்
வெயர்வெழும்பிவாயுமாகுஞ், சூலப்பாமூலமுளைவெ
ளியிற்காணும் சுரங்காணுமசதியொடுசோபங்காணும்

சோபமாயேப்பமதுகலந்துகாணும் சோத்தியங்
களிலலையதுதுணிக்கமெய்தும், தாபமொடுவிக்கல்வந்
தால்நீரைக்கட்டிச் சஞ்சலத்தையுண்டாக்கு மலமுங்க
ட்டும், வாதமுடன்சீதமது கூடும்போது வந்துவிடுமி
ழுப்புடனேயிருபதானாள், பூதமதுகூடிவிட்டு எகிறிப்
பாயும் பொய்யல்லசூதமுனிபுகழ்ந்திட்டேனே, ௰௪

புகழ்ந்திட்டேன் சன்னியெல்லா மூன்றுக்குள்
ளே பூட்டினேன்சிலேற்பனத்தைப்புகழ்ந்துகேளு, இ
கழ்ந்திட்டேன்வாதபித்தம்பார்க்கவேண்டா மினிதா
னசடலமெல்லாங்குளிர்ச்சியாகு, மகிழ்ந்திட்டேன்சி
லேற்பனத்தைப்பிறித்துப்பார்க்கில் மதித்தெழுந்து
தூயதுபோல்பொங்கிக்கண்டால், தகழ்ந்திட்டவிசை
போச்சுஆவிபோச்சு தப்பாதுஎழுபதுநாள்தான்சொ
ன்னேமே. ௰௫

சொன்னதினால் நாடியெல்லாங்காணார்காணார் சூ
ட்சமாய்நிலையறிந்துசொல்லவேணும், இன்னதினாலா
காது யென்றேயெண்ணி இருமாந்துதிரிந்தார்கள் கா
ணார்காணார், முன்னதினால்வாதநிலை பார்க்கவேணும்
முறைப்படியேதொநதநிலையறியவேணும், பின்னதி
னால்வேறொன்றும்பார்க்கவேண்டாம் பிரிந்துவருநாடி
யெல்லாம் பேசக்கேளே, ௰௬

கேளப்பாமூலத்திலெழுந்தவாய்வு கிறுவிதமாய்
ச்சொல்லுகிறேன்குணத்தைக்கேளு, நாளப்பாதினங்

தோறும்வாய்வுமீறில் நலமுடனேமலமிருது மசனஞ்
செல்லாச், சூளப்பாகுடல்பொருமிவலியாய்க்காணும்
தொத்துமிகவாதபித்தங்கடினமாகுந், தேளப்பாதே
கமெல்லாம்புண்போனோகும் சிக்கெனவே வலங்கழி
யுஞ்சிணாய்ப்பாரோ, ௰௭

டாரப்பாமூலமதிலெழுந்தவாயு பாங்குடனேதீ
ருவதுபதினோர்நாளிற், சிரப்பாதவிருமல்மருந்துசெய்
தால் திருமதுவாதபித்தமிதிலேவாங்கும் ஆரப்பாஇ
ணைதயறிந்துசெய்யாவிட்டால் அண்டத்தில்குடேறும்
வாய்வுமீறுங்; தாரப்பாகிருணியைப்போற் குணமேக
ண்டு தவறுவருமன்பத்தோர் நாளில்தானே, ௰௮

தானென்றக்ஷயமிருமல்நாடிகாணச் சாற்றுகிறே
ன்பித்தமதில்சிதங்கூடிற், கோனென்றசிரசுதனில் நீ
ரேகொள்ளும் குத்துடனேயிருமல்வருங் கோழைகா
ணுந், தேனென்றஇளைப்புவரும்ரெத்தங்காணுந் தீரா
துமாதமாறுசெப்பலாகு, மூனென்றவுடம்புதனில் தீ
ராரோக முரைக்கிறேனின்னதென்றுமுந்திமுந்தி,

முந்தியதோர்பாதமுடன்புறங்கால்பிச முகத்தி
லேவீக்கமதுகண்டுதானாற், பிந்தியதோர்கழிச்சலுட
ன்கிருணியாகும் பேசரிததீராதசாத்தியமாகுஞ் சிந்
தியதோர்வாந்தியுடன்விக்கல்கண்டால் தீராதுதீராது
திண்ணமாகும், அந்தியதோர்க்ஷயமிருமல் சலகிருணி
ஆனதுந்தீராது அசாத்தியந்தானே, ௨௰

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராஜாங்கத்தி
லறிந்திடவேயின்னமொன்றுமடைவாய்ச்கேளு, அசா
த்தியந்தானீர்க்கோர்வையசதிருன்மமானதொருவலி
குன்மம்யோனிப்புத்து, அசாத்தியந்தான் குறைநோ
வுநாக்கில்புத்து அண்டத்தில்பவுத்திரமுந்தொண்டை
த்தூறும், அசாத்தியந்தான் முசல்கிருக்குஉள்வீச்சோ
டுஆணுலுந்தீராதுஅரிதுதானே, உக

தானென்றுசலக்கழிச்சல்மதமதப்புத் தலைதனி
லேயுதித்தெழுந்தபிளவைத்தானுங், காணென்றருத்
திரவலிகாசிகண்டமாலை கன்னத்திற்புத்துடனே கும
ரகண்டன், தேனென்றமகாவாதஞ்சன்னிவாதஞ் சே
த்துமசயமுளமாந்தைசுரமாந்தைகவிசை, ஊனென்று
உயிரழிக்குமளவுபோகா துள்ளபடிசொன்னோநாம்
வாதநிலைப்பாரே, உஉ

வாதமதுகீழேநோக்காதிருந்து மயக்கத்திற் சே
ராதேயனல்தாழாதே, பேதமதுசெய்யாமற் பிலத்தி
ருந்தாற் பிராணனங்கேபிலத்திருக்கும்பிசகோவில்லை
நீதமதுதபபியேஐயத்தோடே நீர்வாதஞ்சேர்ந்துகீழ்
நேரேயோடில், தீதானவியாதியெலாஞ் செனிப்பித்
தோடுஞ் சீருடையவாதநிலைநாடிதேறே, உங

நாடியுடவிதங்களெல்லாம்வாதவீட்டில் நாடலா
மலையாதேநலமாய்ப்பாரு, தேடிவரும் நோய்களெல்
லாம்ராசாளைவைத்தான் சேர்ந்துநின்றாற்காணுமதுசெப்

பவேண்டாம், தாடிவரும்பித்தமதாசன்கிழே சமைந்திருப்பான் தயிரியவானவத்தனல்ல, கொடியதவமுண்டவர்க்குக்குற்றஞ்செய்தாற் கொடுமைசெய்தசீதத்தைஅழைப்பாரென்றே. ௨௪

அழைத்துடனே அனுபவிப்பான்பித்தாச னது கேட்பான்சிதறுது அம்புபோலே, களைத்துடனே வந்திழுப்பான்கயிறுகட்டிக் கண்ணெல்லாமுழிபிரளக்கபந்தான்வந்து, வளைத்துடனே அக்கினியும் விந்துதண்ணீர் மண்ணுங்கரைந்துவிடும்வகைதான்பாரு, இளைத்துடனேகூடுவிட்டேகும்பாரு இன்னமொருகுறியதனையியம்புவோமே. ௨௫

இயம்புகிறேன்வாதமொடுபித்தங்கூடிலினிப்பானதொந்திப்பென்றறியலாகும், நயம்பெறவேசிலேற்பனமுங்கூடித்தானால் நாட்டலாங்குடிலமென்றே நாட்டலாகுஞ், சுயம்பெறவேபித்தமதுவீழ்ந்துபோனாற்கொல்லரிதுபேசாதேசுருக்கதாகும், இயம்புகிறேன கபம்வீழ்ந்தாலாறுமாதம் இனிதானசடலமதுயேகும்பாரே. ௨௬

சடலமதுயேகிவிடும் வகைதான்கேளு சாற்றுகிறேன்வாதத்தில்நிலையைப்பாரு, உடலமதுநடுநடுங்கி விறைந்துதானால் ஒன்பதாமாதத்திற் சாவாரென்றுங், சடலமதுகலங்கிவிடும்பித்தாசன் சுதித்திருந்துவிடு

விட்டுக்கபத்திற்சென்றால், நடலமதுகுறைந்துவிடு ம
றுபதாநாளில்நாடுவிட்டுக்காடுபுகும்நடையைப்பாரே,
நடையதுவேயறிந்தாக்கா லாறுதாமம் நாள்தனி
லேயறிவார்கள்நாதனுவார், விடைதனிலே யேறிவரு
ம்சிவனார்சொல்ல, வேதாந்தசூதமுனிவெளியிற்போ
ட்டேன், கடைதனிலே யின்னமொரு சூட்சஞ்சொல்
வேன் கருத்தறியநாவதுவேகீளதாகி, விடைதனிலே
யேழாநாள்சாவாரென்று இனிதானசூதமுனி யியம்பி
னாரே, ௨௮

இயம்பினார்நாடியெல்லா மிந்தநூற்குள்ளே, யி
டையிரெண்டும்பின்கலையுஞ்சுழிமுனையுமாகும், இயம்
பினாரிதுதானேவாதபித்தமையமிசைவாரக்காலரையு
மொன்றுமாகு, மியம்பினாரிப்படியேநடக்கும்போது
இடுக்கங்களொன்றுமில்லையிருக்கலாகும், இயம்பினார்
குடிலமதுதோன்றிற்சீதமெழும்பினாற்பிணிபலவுமெ
ய்துந்தானே, ௨௯

தானென்றநாடிநிலையறியவேணுஞ் சதாகாலஞ்
சாத்திரத்தைப்பார்க்கவேணும், ஊனென்றதத்துவங்
கள்சரீரக்கூறும் உற்றுணர்ந்துபஞ்சபாதகங்கள்நீக்கி,
தேனென்றமனோன்மணியாள் பாதந்தன்னைத் தினந்
தோறுமயராமல்சேவித்தேற்றி, நானென்றஆணவங்
காமமாய்கையற்று நல்லபரிசாரஞ்செய்நாடிமுற்றே,()

சூதமுனிநாடி - முற்றும்.

சிவமயம்.

# ராஜாங்கநாடி ௨௫.

—(*)—

வாதமதுமுன்னெழுந்துதாழ்ந்துசற்றேமயிலது
போல்நடைநடந்து மங்குமாகில், சேதமதுஇல்லையெ
ண்பத்தாறுமாண்டிற் செப்பலாமாணமென்று தீர்க்க
மாசு, நாதமதுகுறைந்துவிட்டில்போலேகண்டால் நா
ளெட்டில்மரணமென்றுநவிலலாகும், பேதமதுஇல்லை
யிதுபிசகிடாமற்பெரியவனுஞ்சூதமுனிபேசுங்காலே

காலானபித்தமதுதுடியேகண்டு கனலெழுந்துவ
ந்திடுகில்சிதமாச்சு, மாலாகிலும்பார்க்க மருந்துமில்லை
மாணமதுமூன்றுதிங்கள்வரிசையாகும், நாலானபித்
தமதுவொங்கத்தொங்கி நடைநடந்துபாம்பதுபோல்
நடக்குமாகில், மேலானபதிமூன்றுந் திங்கள்தன்னில்
வீற்றிருந்தகூடழியும்விரும்பிப்பாரே, ௨

பாரப்பாவயித்தியனே மரணநாடி பாக்குடனே
சொல்லுகிறேன்பாரின்மீது, சோப்பாசிதமதுசிலேற்
பனமாகுஞ் சித்திரியேயானைமபோல்நடந்ததானால், கூ
டப்பாசாவுபதினொன்றுமாணடிற் குறையில்லை நன்ட

துபோல்நடந்துதானால், மாரப்பாநாள்வந்த தென்று
சொல்லி மருந்துகளையருந்தாமலிருந்திடீரே, ரு

இருந்திடவேயின்னமொருகுறிதான்கேளு இப
ல்பானவாதமதுகீழேநோக்கி, லருந்திடவேமேலேறி
நடக்குமாகி லப்பனேயன்பதுநாளாகுமென்ன, மரிந்
திடவேபித்தமதுதொங்கிச்சற்றே மணிநாக்குஅசை
வதுபோலசையுமாகில், சுரந்திடவேவிக்கமதுகழிச்ச
லாகிச் சோர்வுடனேவைகுந்தஞ்சுகமதாமே, சு

ஆமடாகண்சிவந்து சுழித்துவாங்கி யறிவுகெட்டு
மதிமயங்கியோசைகுன்றிற்,போமடாஆறுநாள்சிவன்
போகும் பேதமதுநின்றுசற்றேபேசுமாகில், நாமடா
பித்தமதுவிழுவில்லைநம்பரிதுவம்புவரும்நாடாதேகே
ள், சாமடாமூன்றுநாள்சிவன்போகும் சக்கரமுமறுதி
யென்றேசாற்றலாமே, ஏ

சாற்றுகிறேன்வாதபித்தசிலேற்பனமூன்று சகி
தங்கள்தப்பியேகொள்ளுமாகிற், வாழ்த்துகிறேன்சீத
மதுவந்துதோன்றி வளர்ச்சியொடுவிக்கல்வருங்குளிர்
ச்சியாகும், மேற்றுகிறேன்இளைப்புவரும்பேச்சோயி
ல்லை யிதமாகவாதமதுவிழுந்துதென்றால், ஆற்றுகிறே

ன்இருபத்தொன்றுநாள்சாவான் ஆதியந்தம்பித்தம
ணைதஅறிந்துபாரே, ௬

அறிந்துபார்ராசாங்கமையைந்துள்ளே அறியாத
பிள்ளைகளும்நாடிகாண்பார், பிறிந்துபார்பித்தமது அ
சைவுநின்றால் பேசரிதுமோகமதுமரணமாகும்,தெறி
ந்துபார்சிலேற்பனமும் அசைவுநின்றால் திரேகமது
யேகிவிடும்இருபதாநாள், குறிந்துபார்பித்தமொடுவா
தங்கூடில்குறிசொல்வார்ஏழாண்டிற்விறைந்துபோமே

குறைந்துபோம்வாதமொடு சிதங்கூடில் கூட்டி
யேமாட்டுவிராய்கூதபத்தைதத்தானும், நிறைந்துபோம்
கபமேலேயிளைப்புமாகும் நெஞ்சடைப்புகாதடைப்பு
நிலையேயில்லை, விறைந்துபோம்பித்தமதில்வாதஞ்சே
ரில் வலியகுன்மம்வாந்தியொடு அன்னந்தள்ளும், உ
றைந்துபோப் இன்னமொருகுறியைச்சொல்வேன் உ
யிர்நிலைக்குவாதநிலை உரைக்கிறேனே, ௮

உரைக்கிறேன்வாதத்தில்சிதங்கூடில் உதிரவலி
கொண்டுமிகஉடம்புவீங்கும், நிரைக்கிறேன்பதினாலி
ல்மரணமாகும் மண்டைதனில்வெறியெழும்பிப் பிற
வழியைப்பார்க்கும், அரைக்கிறமருந்துதனைச் செல்ல
வொட்டா தாக்கரிததுக் கொள்ளுமடா அதின்பேர்
கேளே, ௯

கேளப்பாமூன்றுமிக அசைவுநின்றாற் கெடியா னவிரல்மூன்றின் துடிப்புக்காணில், நாளப்பா ஆசன த்தில்சூடுகொள்ளும் நலமானமூத்திரமுஞ்சிறுத்துப் போகும், தாளப்பாபிராணவலிஎரிவுகுத்துஞ் தன்சி ரத்தில்வேர்வெழும்புவாயுவுமாகும், சூளப்பாமூலமி கவெளியிற்காணும் சுரங்காணுமசதியொடு சோபங் காணும், ம

சோசமதுவெப்பமதுவந்துகாணும் சோத்தியங்க ளில்லையதுசுகமேஆகும், தாகமொடுவிக்கல்வந்தால் நிரைக்கட்டிச் சஞ்சலத்தையுண்டாக்குமலத்தைக்கட் டும், வாதமொடுசிதமதுவந்துகூடும் வந்துவிடுமிளைப் புடனேயிருபதாநாள், பூதமதுகூடிவிட்டேகிப்போகு ம் பொய்யல்லாசாங்கம்புகழ்ந்திட்டேனே. மக

புகழ்ந்திட்டேன்சன்னியென்றமூன்றுக்குள்ளே பூட்டினேன்சிலேற்பனத்தைப் புகழுந்துபாரு, இமழ்ந் திட்டவாதபித்தம் பார்க்கவேண்டாம் இனிதானசட் டலமெல்லாங்குளிர்ச்சியாகும், மகிழ்ந்திட்டேன்சிலே ற்பனத்தைபிரித்துப்பார்க்கில் மதித்தெழுத்து துடி

போலேயேயிக்கண்டால், தாழ்ந்திட்டால் விளைபோ
ச்சதுவிபோர்க்க தப்பாதெனன்பானேன் நான்சொன்
னேனே. ௰௨

சொன்னதினால் நாடியெல்லாங் காணார் காணார் கு
ட்சமாய்ப்பிளையதித்திச்சொல்லவேணும், என்னதினால
காதலன்னு என்னு இருதயத்தில்வைத்தாக்கார்க
ணும்காணும், பின்னதினால்வேறென்றும் பார்க்கவே
ண்டாம் பிரிக்கவரும்நாடியெல்லாம்பேசக்கேளே.

கேளப்பாமூலத்திலெழுந்தவாய்வு பேச்சிதமா
ய்ச்சொல்லுகிறேன்குணத்தைக்கேளு, காளப்பாதின
க்கேயாம்வாய்வுபிறந்து வெழுடனேமலம்பிறக்கும் கடி
னமாகும், கேளப்பாகுடலெரிவும்வலிசோகாணுந்தொ
க்கங்கலுண்டானகடினமாகுந், தெளப்பாமலத்திலே
ளாக்காணுஞ்சிக்கெனவெல்லாஞ்சேழுந்தெரப்பாலே

பாரப்பாமூலத்திலெழுந்தவாய்வு பாங்குடனே
திருமதியதிநாளுகான், திரப்பாதவிராமல் மருந்துசெ
ய்தால் திருமவாதமித்தம் அதிலேவாங்கும், ஆய்
பாயினைதஅதித்து செய்யாவிட்டால் அண்டத்திலே கு

டேறும்வாய்வுமீறும்,தாரப்பாகிருணிபோல்குணமே கண்டு தட்டுமதுமன்பத்தோர்நாளியதானே. ௰௫

தானென்றக்ஷயமிருமல்நாடிக்காணச் சாற்றுகிறேன்பித்தமதிற்சீதங்கூடிற், கோவென்றசிரசுதனில்நீரைக்கொள்ளுங் குத்துடனேயிருமல்வருங் கோழைகாணுங், தேவென்றபீளைப்புவருமரத்தங்காணுந்திராது ஆறுமதிசெப்பலாகும், ஊவென்றஉடம்புதனில்திராரோகம் உரைக்கிறேன்இன்னதென்றுமுந்திமுந்தி.

மூந்தியதோர்பாதம்புறங்கால்பீசமுகத்திலேவீக்கமதுகண்டதானால்,பித்தியதோர்கழிச்சலதுகிருணியாகும் பேரிசதுதிராதுதிண்ணமாக, அநக்ஷர்மேதிதயமிருமல்சாத்தியங்கிருணி ஆனாலுந்திராது அசாத்தியந்தானே. ௰௭

அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராஜாங்கத்தில் அழித்திடவேயின்னதென்று அடைவாய்க்கேளு, அசாத்தியந்தான்நீர்க்கோர்வை சத்திகுன்மம் ஆனதொருவலிகுன்மம்யோனிப்புத்து, அசாத்தியந்தான்குணாநோவுலிங்கப்புத்து ஆனதொருதொண்டைதனில்தூறுமாகும், அசாத்தியந்தான்முசல்கிறுக்குஉள்விஷ்சோடு ஆனாலுந்திராதுஅறிந்துதானே. ௰௮

தானென்றுசலக்கழிச்சல்யோனிப்புக்து தலைத
னிலேஉதித்தெழுந்தபிளளைவதானும், கானென்றஉ
திரவலிகாசிநோவு கண்டிதமேகுமாகண்டன்திராரோ
சம், தேனென்றகொடிதனிலேபவுத்திரங்கள் தீராது
இன்னமொன்றுசொல்லக்கேளு, மானென்றஉளமாங்
னைதயிலைவகளெல்லா மகாவாதைபண்ணுமடா வாத
நாடி. ௰௯

நாடியுடவிதங்களெல்லாம்வாதவீட்டில் நாட்டா
மலில்லையனைதநலமாய்ப்பாரு, தேடிவரும்நோய்களெ
ல்லாம்ராசானைவத்தான் சேர்ந்துநின்றால் காணுமடா
செப்பலாகும், ஆடிவரும்பித்தமதுராசன்கீழே அமர்
ந்திருப்பான்தயிரியவான் அவனைப்பார்த்தாற், கோடி
தளமுண்டுஅவர்குற்றஞ்செய்தாற் குணமாகுஞ்சிதம
னைதயழைப்பானென்றே. ௨௰

அழைத்துடனேயநுபவிப்பான்பித்தராசன் அ
துகேட்பான்கூடியமானராசன்தானும், கழைத்துடனே
யெழுந்திருப்பான்அசன்றங்கேதான் கண்மூடிமுழிக்
குமுன்னேபிழைக்காமல்வந்து, வழைத்துடனே அக்
கினியும்விந்துதன்னில்வந்துமண்ணுங்களைத்துவிடும்

வகைதான்பாரு, இமைத்துடனே கூடுவிட்டுயேகும்
பாரு இன்னமொருகுறிய தனையியம்பக்கேளே. உக

இயம்புவரோவாதமுடன்சிதங்கூடில் இயல்பாக
த்தொந்திப்பென்றறியலாகும், நயம்பெறவேசிலேற்
பனமுங்கூடித்தானல் நாட்டலாங்குடிலமென்றுநாட்
டலாகும், சுயம்பெறவேகபம்விழுந்தால் ஆறுமாதம்
சொல்லரிதுபேசரிதுசுறுக்கதாகும், இயப்புகிறேன்
பித்தமதுவிளைந்துதானல் இனிதானசடலமதுபேகு
ந்தானே. உஉ

சடலமதுபேகிவிடுமகணைக்கேளு சாற்றுகிறேன்
வாதத்திலேயஞ்சேர, உடலமதுநடுநடுங்கி விளையல்கா
ணும் உத்தமனேநான்காமாதம்மரணமாவார், சடலம
துகலங்கிவிடும்பித்தராசன், கதித்திருந்துவிடுவிட்டுக
பத்திற்சேர்ந்தால் நடலமதுகுறைந்துவிடுமிருபதாநா
ள் நாடுவிட்டுக்காடுபுகும்நடையைப்பாரே. உந

நடையதுவேயறிந்தாக்காலாறுதாரம் நாள்தனி
லேயறிவார்கள்நாதனுவார், விடைதனிலேயேறிவரு
ம்சிவனூர்சொல்ல வேதாந்தாசமுனி வெளியில்போ

ட்டார், கலைதனிலேயின்னமொருகுட்சஞ்சொல்லே ன் கருத்தறியும்காவதுவே வியபிதாகும், இடைதனி லேயெழுநாளன்சாவாமென்று இனிதானாசமுனிஇய ம்பினாரே. ௨௪

இயம்பினோர்நாடியெல்லாம் இந்நூற்குள்ளே யிரு பத்தஞ்சல்லாமல்வேறேயில்லை, இயம்பினோர்நாடியெல் லாம்தெளிவாய்க்காணஎழுதிதல்லநாடிகுணமறயுகுதன் மை, இயம்பினோர்நாடியெல்லாம்வகையாய்க்கண்டு இத யசமானிடரின் கூறுசொல்ல, இயம்பினோர் நாடிகள் தொண்ணூற்றுறு இயல்பறிந்துகுணமுறைபபாய் நா டிமுற்றே. ௨௫

சரஞானக்கணாடி முற்றும்.

---

உ

கடவுள் துணை.

# பொருள் அகராதி.


| | | | |
|---|---|---|---|
| அஞ்சனக்கல் | ௧௫ | காப்பு | ௫ |
| அஷ்டலோகமாரணம் | ௧௯ | காரியபறபம் | ௧௯ |
| அப்பிரேகம் | ௧௰ | குக்கில்-குந்திரிக்கம் | ௧௪ |
| அரிதாரம் | ௬ | கும்பம்ஸ்தாபிக்க | ௯ |
| அறுபத்தநாலு சாக்குசத்தி | ௧௯ | கெந்தி | ௧௧ |
| உருசெபிக்க | ௯ | கெருடபச்சை | ௰ |
| ஐமலேகியம் | ௫௨ | கெவுரி-குனாப்பல்லி | ௯ |
| கடுகுலேகியம் | ௫௧ | சண்டாளர்செயனை | ௫ |
| கடுக்காய்லேகியம் | ௨௮ | சாக்குசத்தி | ௮ |
| கருவங்கம் | ௧௪ | சலாசத்து-கல்நார் | ௰ |
| கல்மதம் | ௧௰ | சாத்திரபேதி | ௧௫ |
| கன்மந்திர அக்ஷரமெய் முதிக்கட்ட | ௭ | சிவனாதேவர் | ௰ |
| கன்மவிர்த்திசெய்ய | ௫ | சிரகலேகியம் | ௨௯ |
| காந்தசெந்தூரம் | ௧௮ | சினக்காரம் | ௰ |
| | | சுக்குலேகியம் | ௨௭ |
| | | சேங்கொட்டை | ௧௰ |

# பொருள் அகராதி.


| | |
|---|---|
| தங்கபற்பம் | ௨௧ |
| தன்மம்செய்யாதவர் | ௪ |
| தாம்பிரம் | ௧௪ |
| தாரசிங்கி | ௧௨ |
| தாணிக்காய்லேகியம் | ௨௫ |
| துருசி | ௧ |
| தொட்டிபாஷாணம் | ௧ |
| நாகம்விலக்க | ௪ |
| நாகம் | ௧௪ |
| நூல்களைஆராய்ந்து பார்க்க | ௫ |
| நூல்பெருமை | ௪ |
| நெல்லிக்காய்லேகியம் | ௨௫ |
| பிரணவக்கவசம் | ௫ |
| பூரம் | ௮ |
| பெருங்காயலேகியம் | ௩௩ |
| பொரிக்காரம் | ௰ |
| பொன்னிமிளை | ௧௫ |
| மடல்தூத்தம் | ௧௩ |
| மனோசிஷ | ௯ |
| மிளகுலேகியம் | ௨௨ |
| முடிதாரம் | ௧௨ |
| ரசம் | ௧௧ |
| லிங்கம் | ௮ |
| லோககுளிகை | ௨௧ |
| லோகசெந்தூரம் | ௧௭ |
| வங்கபற்பம் | ௧௯ |
| வீரம் | ௮ |
| வெங்கியலேகியம் | ௩௧ |
| வெள்ளிபற்பம் | ௨௰ |
| வெள்ளைபாஷாணம் | ௯ |


முற்றிற்று.